தகவல் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்ட நேரத்தையும், ஒப்பிட்டு பார்க்கும் போது முதல் தகவல் பெறுவதில் காரணமற்ற காலதாமதம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(3) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் கூறியுள்ள சங்கதிகளில் **அ.சா.ஆ.1 ஆன புகார் மனு**வில் குற்றம் நடந்த நேரம் மற்றும் இடத்தை பொறுத்து **அ.சா.2 அனிஷா பெலிக்சி** தனது சாட்சியத்தில் 28.02.2021 ஆம் தேதி நள்ளிரவு 12.00 மணியளவில் தங்கள் வீட்டின் பின்பக்க கதவை உடைத்து வீட்டிற்குள் இருந்த டி.வி, மிக்சி, டார்ச் லைட், அயன்பாக்ஸ், எமர்ஜென்சி லைட், உண்டியல் பணம் ரூபாய் 2,000/—ம் ஆகியவற்றை திருடி சென்றுள்ளார்கள் என்றும், இது சம்மந்தமாக இரணியல் காவல் நிலையத்தில் புகார்மனு கொடுத்தாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(4) மேற்படி சாட்சியத்தை பரிசீலனை செய்த போது மேற்படி புகார் மனுவில் உள்ள சங்கதிகள் அனைத்தும் **பா.சா.அ2023 பிரிவு 5,6ன் கீழ்** தொடர்புடைய சங்கதிகள் என்றும் அதில் உள்ள வாசகங்கள் குறித்த சங்கதிகள் **பா.சா.அ2023 பிரிவு 15ன் கீழ்** தொடர்புடையவை என்றும் இந்த வழக்கை பொறுத்தவரை சம்பவ நேரம் மற்றும் இடம் குறித்த சங்கதிகளை **பா.சா.அ 2023 பிரிவு 7ன் கீழ்** தொடர்புபடுத்தி ஆவணங்கள் மற்றும் சாட்சிகளின் அடிப்படையில் அரசுத்தரப்பு தனது தரப்பை சமர்ப்பித்துள்ளது என்றும் மேற்படி சங்கதிகளை நிரூபித்துள்ளது என்றே இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(5) மேற்சொன்ன கருத்தில் கொண்ட சங்கதிகளை பொறுத்து **இந்த வழக்கில் ஒரு திருட்டு சம்பவம் நடைபெற்றுள்ளது என்று** ஆவணங்களின் அடிப்படையிலும், சாட்சியங்களின் அடிப்படையிலும் அரசுத்தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

<u>12. **குற்ற ஏற்பையும் அது தொடர்பான கண்டுபிடிக்கப்பட்ட புதிய சங்கதிகளும்......**</u>

(1) இந்த வழக்கில் முக்கிய பங்களிப்பாக சாட்சியங்களில் சொல்லப்பட்ட குற்ற ஏற்பையும் அது தொடர்பான கண்டுபிடிக்கப்பட்ட புதிய சங்கதிகளை பொறுத்து அரசுத்தரப்பில் குற்ற ஏற்புரை சாட்சிகளாக சொல்லப்பட்ட முத்துராமன் காணொலி காட்சி



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.25 19:42:42 +0530

Judicial Magistrate, Eraniel in C.C.441/2022

